**செய்திவெளியீடுஎண்:169** **நாள்:25.02.2021**

**<u>செய்திவெளியீடு</u>**

தமிழ்நாடு அரசின் அருங்காட்சியகங்கள் துறை சார்பாக மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் பின்வரும் அறிவிப்பினை அறிவித்தார்கள்.

**‘‘சேலம், கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்ட அரசு அருங்காட்சியகங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 50சென்ட் அரசு நிலத்தில் புதிய கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, மாற்றியமைப்பதற்காக தொடராச்செலவினமாக ரூ.16கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்’’**

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, முதற்கட்டமாக சேலம் அரசு அருங்காட்சியகத்திற்கு புதிய கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் சேலம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தை மாற்றியமைக்க தொடராச்செலவினமாக ரூ.5கோடிக்கு நிருவாக அனுமதியளித்து அரசு ஆணையிட்டுள்ளது. (அரசாணை (நிலை)எண்.28, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை, நாள்.12.02.2021)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**